**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 10/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஞானசேகர் நாயுடு | மதம் | : | இந்து |
| த/பெ | : | வெங்கடாசலம் நாயுடு | ஜாதி | : | -- |
| வயது | : | 71 | கிராமம் | : | வெங்கடாபுரம் அக்ரஹாரம் காலனி |
| தொழில் | : | விவசாயம் | வட்டம் | : | திருத்தணி |

**06.02.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

8. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ன்படி வழக்கு சொத்தான புல எண்.243/7 செங்கம்ம நாயுடு பெயரில்தான் உள்ளது என்றால் ஆமாம். செங்கம்ம நாயுடு தமயந்தியின் அப்பா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 ன்படி 06.02.2002 ல் செங்கம்ம நாயுடு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ 2ல் வழக்கு சொத்து உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 4 பட்டாவில் என் பெயர் இல்லை என்றால் என் பெயரில் எதுவுமே இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். ஆனால் 23 வருடங்களாக நான்தான் பயிர் செய்து வருகிறேன். என் பெயரில் பட்டா, சிட்டா இல்லை என்றால் சரிதான்.

9. நான் சாகுபடி செய்வதற்கு என் பெயரில் அடங்கல் உள்ளதா என்றால் அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். நான் கிராம நிர்வாக அதிகாரியிடம் கையெழுத்து பெற்று தாக்கல் செய்துள்ள சாகுபடி அடங்கலிலும் செங்கம்ம நாயுடு பெயரில்தான் உள்ளது என்றால் ஆமாம். எனக்கு வழக்கே இல்லை என்றால் சரியல்ல. தமயந்தி காஞ்சிபுரத்தில் வழக்கறிஞராக உள்ளார் என்றால் ஆமாம். அவர் வழக்கறிஞராக உள்ள ஜெயகுமார் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றால் ஆமாம். தமயந்தியும் அவர் கணவரும் காஞ்சிபுரத்தில் வழக்கறிஞர்களாக பணியாற்றி வருகிறார்கள் என்றால் ஆமாம்.

10. வேற்று ஜாதியில் திருமணம் செய்ததால் 2ம் பிரதிவாதியை நாங்கள் தள்ளி வைத்துள்ளோம் என்றால் இல்லை. அந்த துவேசத்தில்தான் 2ம் பிரதிவாதிக்கு உரிமையான சொத்தை நாங்கள் இல்லை என கூறுகிறோம் என்றால் சரியல்ல. தமயந்தி தனது பங்கை அவரது மகளுக்கு எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தைதான் அவ்வாறு தமயந்தி எழுதி வைத்தாரா என்றால் அவருக்கு பங்கே இல்லை. நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம் என்பதற்கு எந்த ஆவணங்களும் இல்லை என்றால் நாங்கள் எனக்கு எழுதி கொடுத்திருந்தால்தான் எனக்கு ஆவணம் வந்திருக்கும். இல்லாத நிலையில் எப்படி ஆவணம் வந்திருக்கும்.

11. தமயந்தி தனது மகளுக்கு எழுதி வைத்த ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலத்தில் தாய் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என திருப்பப்பட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியாது. சென்னை உயர்நீதிமன்றத்தில் அதை எதிர்த்து நீதிபேராணை மனு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தம்பி சொல்லி தெரியும். என் தம்பி பெயர் என்ன என்றால் சித்தப்பா மகன் லட்சுமிகாந்தன் ஆகும். சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற்று ஆவணம் பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி தமயந்தி தன் மகளுக்கு எழுதி வைத்தது போக மீதி சொத்து தமயந்திக்கு பாத்தியம் என்றால் நான்தான் அனுபவித்து வருகிறேன். முடிந்தால் அவர்களை வந்து எடுத்து கொள்ள சொல்லுங்கள்.

12. தமயந்தி தனது பங்கான 59.5 செண்ட்டில் 47.6 செண்ட்டை தன் மகள் நந்தா பிரியதர்ஷினிக்கு எழுதிவைத்தார் என்றால் என் தம்பி மூலமாக தெரியும். அவ்வாறு எழுத அவருக்கு உரிமையில்லை. மீதி 11.9 செண்ட் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி அனைத்து சொத்தையும் பாகம் பிரித்து கொள்ள கேட்டபோது நான்தான் ஒத்துவரவில்லை என்றால் சரியல்ல. லட்சுமிகாந்தனுக்கும் செங்கம்ம நாயுடு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் ஆமாம். லட்சுமிகாந்தன்தான் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆஜராகி 2ம் பிரதிவாதி தனது மகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைப்பதில் தனக்கு ஆட்சேபணை இல்லை என கூறினார் என்றால் இல்லை.

13. நான் இதுவரை எப்போதாவது சென்னை உயர்நீதிமன்றம் சென்றுள்ளேனா என்றால் இல்லை. என் குடும்பத்தில் மொத்தம் எத்தனை பேர் என்றால் 10 பேர் ஆகும். நான் தமயந்தியை சேர்காமல் 10 பேர் என சொல்கிறேன்

என்றாலும் மொத்தம் 11 பேர் என்றாலும் என் பெரியப்ப மௌண்ட் நாயுடுக்கு ஒரே பெண் ரவணம்மாள், என் அப்பாவுக்கு நாங்கள் மொத்தம் 5 பேர், என் சித்தப்பாவுக்கு 2 பெண், 2 ஆண். ஆக மொத்தம் 10 பேர் ஆவோம். செங்கம்ம நாயுடுக்கும் எனக்கும் எதாவது கருத்துவேறுபாடு இருந்ததா என்றால் இல்லை. எனக்கும் செங்கம்ம நாயுடுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று எனது பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

14. 2ம் பிரதிவாதி தொழில் காரணமாக வெளியூரில் இருப்பதால் அவர் சொத்தை பறிக்க அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. லட்சுமிகாந்தனையும் மீதி வாரிசுகளையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் பாதிக்கப்பட்டது நான் மட்டும்தான். வெங்டாசலம் நாயுடுவின் 5 வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை. செங்கம்ம நாயுடுவின் மகள் சுசேந்திரமணிக்கு சொத்து உள்ளதா என்றால் பெண் மக்களுக்கு சொத்தே இல்லை. சொந்த தந்தை தனது சொந்த மகளை விட்டுவிட்டு எனக்கு சொத்து கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)